நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 797/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாப்பா |
| தந்தை / கணவர் பெயர் | : | முருகேசன் |
| கிராமம் | : | மாதையன்குட்டை |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 50 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10–ஆம் தேதி*** பதிவு *செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.46PM

1. நான் மாதையன்குட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். இந்த விபத்தில் காயம்பட்டவர் எனது மகன் விக்னேஷ்வரன் ஆவார். சுமார் 6 மாதத்திற்கு முன்பு காலை09.00 மணியளவில் என்னுடைய மகன் பக்கத்து வீட்டை சேர்ந்த நண்பரிடமிருந்து TVS 50 இருச்சக்கர

வாகனத்தை வீட்டில் இருந்து கிளம்பி பவானி டு மேட்டூர் மெயின்ரோட்டில் 4 ரோடு ரவுண்டானாவில் சென்றுக்கொண்டிருந்தபோது தெர்மல் இருந்து ஆண்டிக்கவுண்டர் நோக்கி வந்த தவேரா காரை வேகமாக ஓட்டிவந்த ஆஜர் எதிரி எனது மகன் ஓட்டிவந்த இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக தகவல் சொன்னார்கள்.

2. காயம்பட்ட என் மகனை எதிரியின் காரிலேயே அவரே மருத்துவமனைக்கு அழைத்துவந்து சிகிச்சைக்கு சேர்த்துள்ளார். நான் சென்று பார்த்தபோது என் மகனுக்கு தலை, காது, கன்னம் ஆகிய இடங்களில் வலதுப்பக்கமாக காயம் ஏற்பட்டிருந்தது. என்னை மேட்டூர் அரசு மருத்துமவமனையில் போலீசார் விசாரித்தனர். என் மகன் மயக்கம் நிலையில் இருந்தார்.

3. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டு படித்துக்காண்பித்தார்கள். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என் மகனை மேல் சிகிச்சைக்காக சேலத்திலுள்ள நியூரோ பவுண்டேசன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.55 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 797/2025

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | விக்னேஷ்வரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | முருகேசன் |
| கிராமம் | : | மாதையன்குட்டை |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 21 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.56PM

1. நான் மாதையன்குட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் கோவையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். இந்த விபத்து நடந்த சமயத்தில் நான் ஊருக்கு வந்திருந்தேன். 23.07.2025 ம் தேதி காலை 09.00 மணிக்கு என்னுடைய உறவினரின் இருச்சக்கர வாகனமான 9232 TVS 50 பவானி டு

மேட்டூர் மெயின் ரோட்டில் 4 ரோடு ரவுண்டானா அருகே சென்றுக்கொண்டிருந்தபோது எனக்கு வலதுப்புறத்தில் தெர்மலில் இருந்து ஆண்டிக்கவுன்டர் நோக்கி தவேரா காரினை ஓட்டி வந்த ஆஜர் எதிரி வேகமாக ஓட்டிவந்து என்மீது மோதியதில் எனக்கு வலதுப்பக்க தலை, காது, கன்னம் ஆகிய இடங்களில் பலத்த அடிப்பட்டது.

2. என்னை ஆஜர் எதிரி அவருடைய காரிலேயே மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். நான் மேட்டூர்அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். போலீசார் என்னை விசாரிக்க மேட்டூர் அரசு மருத்துவமனை வந்தபோது நான் மயக்கத்தில் இருந்ததால் என் அம்மா அ.சா.1 பாப்பாவிடம் வாக்குமூலம் பெற்றுச்சென்றனர். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக நியூரோ பவுன்டேசன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 02.00 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**